ரஷ்யா



# இது சாட்சி பகர்வதற்கான காலம்

*“அதுதான் தேவனைப்பற்றி நானே சாட்சிசொன்ன முதல் அனுபவம்”.*

ரஷ்யாவில் உள்ள சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளியில் படிக்கிறாள் அலினா; அங்கு, வருடாந்தர கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

ஒவ்வொரு வருடமும், அந்தப் பள்ளியில் படிக்கிற 210 மாணவர்களும் கிறிஸ்துவின் பிறப்பு குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்; அவளுடைய கிராமத்தையும் அதற்கு அப்பாலும் உள்ள கிராமங்களையும் சேர்ந்த நூற்றுக் கணக்கான சிறுவர்களுக்காக அந்த நிகழ்ச்சியை நடத்துவார்கள். கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிற சிறுவர்கள் கைவினைப் பொருட்களையும் மிட்டாய்களையும் செய்வதற்குக் கற்றுக்கொள்வார்கள். அது ஒரு வெளி ஊழியத்திட்டம்; இயேசுவின் அன்பை மக்களுக்குச் சொல்லுவதே அதன் நோக்கம்.

கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியானது 2003ம் வருடம் முதலே சாவோவ்ஸ்கியில் பாரம்பரியமாக நடந்துவருகிறது; அந்நிகழ்ச்சியைக் காண அனைவரும் ஆவலோடு காத்திருப்பார்கள். அந்தப் பட்டணத்து சிறுவர்களுக்கு அந்நிகழ்ச்சி மிகவும் பிடிக்கும். பெற்றோரும் மற்றவர்களும்கூட அந்நிகழ்ச்சியை எதிர்பார்ப்பதுண்டு.

அலினா தன் 11வது வயது முதலே அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வருகிறாள். அப்போது சாவோவ்ஸ்கி கிறிஸ்தவப் பள்ளியில் அவள் சேர்ந்திருக்கவே இல்லை. ஆனால் கலந்துகொள்ள விரும்பினாள்; அதனால் கிறிஸ்துமஸ் மரத்தை ஜோடிப்பதற்கு உதவினாள்.

இப்போது தொடர்ந்து ஐந்து

வருடங்களாக அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வந்திருக்கிறாள். ஆனால் ஆறாவது வருடத்தில், அதில் கலந்துகொள்ள முடியுமா என்று அவளுக்குத் தெரியவில்லை. தன் உடல்நிலை அதற்கு ஒத்துழைக் காதோ என்று கவலைப்பட்டாள். 'நடக்கவிருக்கிற நிகழ்ச்சியில் உம் முடைய நாமத்தை நான் மகிமைப் படுத்தும்படிக்கு எனக்குப் பெல னைத் தாரும்' என்று ஜெபித்தாள்.

நிகழ்ச்சி நடைபெறுகிற நாள் நெருங்க நெருங்க மனஅழுத்தமும் அதிகரித்தது. அதில் கலந்துகொள்ள முடியாதோ என்று கவலைப்பட ஆரம் பித்தாள்.

ஆனால் அந்த நாள் வந்த போது, பூரண குணமானது. முதல் நாள் நிகழ்ச்சிகள் நல்ல முறையில் முடிந்தன. நிகழ்ச்சிகளைக் கண்டு சிறுவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்; அவளுக்கும் சாவோவ்ஸ்கி கிறிஸ் டியன் பள்ளியிலிருந்து வந்திருந்த மற்ற மாணவர்களுக்கும் நிகழ்ச்சி யைக் காணவந்திருந்த பெரியவர் கள் நன்றி சொன்னார்கள்.

பிறகு, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்தினர் அவளிடம் வந் தார்கள். செல்பி எடுக்க விரும்பி னார்கள். அதற்கு அவள் சம்மதித் தாள்.

அதன்பிறகு அந்தத் தாயார், "முன்பின் தெரியாதவர்களுக்காக எதற்கு இவ்வளவு பணத்தையும் நேரத்தையும் செலவிடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அலினா சற்று நேரம் அமைதி யாக இருந்தாள். என்ன பதில் சொல் வதென்று யோசித்தாள். கடந்த ஆறு வருடங்களாக ஏன் அந்த நிகழ்ச்சி யில் கலந்துகொள்ள விரும்பினாள்? அவளுக்கு காரணம் நினைவுக்கு வந்தது. "தேவனை நேசிக்கிற ஒவ் வொருவரும் உண்மையிலேயே தன் உறவினரை நேசிக்கிறார்; நற் கிரியைகளைச் செய்து தேவ அன் பைப் பகிர ஆசைப்படுகிறார்" என்று சொன்னாள்.

அந்தக் குடும்பத்தினரிடம் அலினா வெகு நேரம் பேசிக்கொண் டிருந்தாள். சாவோவ்ஸ்கி அட்வென் டிஸ்ட் பள்ளி பற்றியும், செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபை பற்றியும் அவர்களிடம் சொன்னாள். தன் சபையில் செயல்பட்டு வந்த பாத்ஃஃபைண்டர் மற்றும் அட்வெஞ் சரர் குழுக்கள் பற்றிச் சொல்லி, சிறு வர்களை அதில் பங்கேற்கச் சொல் லும்படி அழைத்தாள்.

பாத்ஃஃபைண்டர் வகுப்புகளுக் குச் செல்லக்கூடிய வயதிலிருந்த தங்கள் மகன்களை அடுத்த பாத் ஃஃபைண்டர் கூட்டத்திற்கு அனுப்பி வைத்தார்கள். பிறகு இரண்டாவது கூட்டத்திலும் அந்தச் சிறுவர்கள் கலந்துகொண்டார்கள்; அதன்பிறகு அந்தக் கூட்டங்களுக்கு வரவில்லை.

அந்தக் குடும்பத்தினருக்கு என்னவானது, அவர்களை எப்ப டித் தொடர்புகொள்வது என்று அலி னாவுக்குத் தெரியவில்லை. ஆனால் அவள் கவலைப்படவில்லை. அவர் களுடைய இருதயங்களில் விதை யை விதைத்த நிம்மதி இருந்தது. தேவன் அந்த விதையை வளரச் செய்து, அவர்களுடைய இருதயங் களை தம்மிடம் இழுப்பார் என்று நம்புகிறாள். பவுலும்கூட, 'நான்

நட்டேன், ... தேவனே விளையச் செய்தார்'' என்கிறார். 1கொரி 3:6. அந்தக் குடும்பத்தினரை தேவனிடம் அறிமுகப்படுத்துகிற வேலையை மட்டுமே அவள் செய்தாள்.

''அதுதான் தேவனைப்பற்றி நானே சாட்சிசொன்ன முதல் அனுபவம். என் உடல்நிலை சீராவதற்கும், அவர்களிடம் பேசுவதற்கும் தேவன் எனக்குப் பெலனளித்தது மகிழ்ச்சி. அவருடைய அன்பை மற்றவர்களுக்குக் காட்ட உதவியதால்மிகவும்மகிழ்ச்சியடைகிறேன்'' என்று சொன்னாள்.

தேவனைப் பற்றிப் பேசுவதற்குப் பயப்படக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டதாகவும் சொன்னாள்.

''நாம் பெலனற்றவர்களாகலாம். ஆனால் தேவன் சமீபத்திலிருந்து, நமக்குப் பெலனளிக்கிறார். நாம் அவரை நம்பினால் போதும்'' என்று சொன்னாள். மூன்று வருடங்களுக்கு முன்பு நீங்கள் கொடுத்த காணிக்கையின் உதவியால், ரஷ்யாவில் உள்ள சாவோவ்ஸ்கி கிறிஸ்டியன் பள்ளிக்காக ஒரு புதிய கட்டிடம் கட்ட முடிந்தது. இந்தக் காலாண்டில், ரஷ்யாவின் தென் ஓரத்திலுள்ள ஸலேகார்டில் ஆவிக்குரிய மற்றும் சமூக மையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு காணிக்கை பயன்படும். ஜூன் 29ம் தேதி, நீங்கள் உதாரத்துவமாகக் காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் "ஐ வில் கோ" என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, "தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்".
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, 'குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்'.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 7, "இளைஞர்கள் ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதற்கும், வேதாகம உலகக் கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவதற்கும் உதவவேண்டும்."
- ரஷ்ய பேரரசில் அட்வென்டிஸ்ட் ஊழியமானது முதன்முதலாக கிரிமியாவில் ஆரம்பித்தது. அப்போது ரஷ்யாவிலிருந்து குடிபெயர்ந்து சென்றவர்கள் அமெரிக்காவிலிருந்து தங்களுடைய நாட்டிற்கு அட்வென்டிஸ்ட் புத்தக ஊழியர்களை அனுப்பிவைத்தார்கள். 1886ம் ஆண்டு முதல் அட்வென்டிஸ்ட் சபை ஆரம்பமானது.